அலுவலகம் செல்லும் / செல்லவிருக்கும் எல்லாப் பெண்களுக்கும் பயனுள்ள அட்டகாசத் தொடர்!

8

# ஆஃபிஸ் எனும் சொர்க்கம்!




சுமதி நாராயணன்

மனித வள மேம்பாட்டு ஆலோசகர்


ஆஃபிஸில் டென்ஷனுக்கு முக்கியமான காரணம் சக ஊழியர்களிடமிருந்து நாம் எதிர்பார்க்கும் ஒத்துழைப்பு கிடைக்காமல் போவதுதான். ஒருவரை ஒருவர் சார்ந்து வேலை செய்யும் இடத்தில், எல்லோருக்கும் அவரவர் வேலை முக்கியம். இதில் இன்னொருவர் எதிர்பார்ப்புக்கு சில சமயம் ஈடுகொடுக்க முடியாமல் போகலாம்.

அதுமட்டும் அல்ல: ஒவ்வொருவரது வேலை செய்யும் பாணியும் வெவ்வேறு விதமாக இருக்கும். ஒருவருடைய வேலை செய்யும் ஸ்டைல்களில் இன்னொருத்தருக்கு நெருடலாக, இடைஞ்சலாகக் கூட இருக்கும். ஒவ்வொரு பாணியும் பயனுள்ளதாகவும் அதேசமயம் பிரச்னை உள்ளதாகவும் இருக்கும்.

வேலை செய்யும் ஸ்டைல் ஐந்து விதங்கள் உள்ளன.என்னவென்று பார்ப்போம். உங்களுடைய ஸ்டைல் என்ன என்பதை கண்டுபிடிக்கலாமே. உங்களுடன் வேலை செய்யும் சக ஊழியர்களின் பாணி என்ன என்பதை ஊகிக்கலாம். ஒன்று 'அவசரம், அவசரமாக செய்வது'. இந்த பாணியில் செயல்படுபவர்கள் எதற்கும் எல்லாவற்றிற்கும் அவசரப்படுவார்கள். இவர்களிடம் எந்த வேலை கொடுத்தாலும் எப்படியாவது முடித்து விடுவார்கள். ஆனால் பிழைகளைப் பற்றி கவனிக்கமாட்டார்கள். இவர்களுடைய காலண்டர் நிரம்பி இருக்கும். மூச்சுவிட நேரம் இருக்காது. 'அடுத்து அடுத்து என்ன?' என்றே ஓடிக்கொண்டிருப்பார்கள்.

பாஸ் இந்த டைப்பாக இருந்தால், தமக்குக் கீழே வேலை செய்பவர்களுக்கு சீக்கிரம் வேலை செய்வதற்குப் அழுத்தம் கொடுப்பார்கள். இந்த ஸ்டைல் ஊழியர்களானால், வேலையை சீக்கிரம் முடித்தாலும், பிழைகள் இருப்பதால் பிரச்னைகள் வரும்.

இத்தகைய சூப்பர் ஃபாஸ்ட் ஆசாமிகள் அவசர உதவித் துறையில் நன்றாகச் செயல்படுவார்கள். இவர்களும் தன் அவசரத்தில் பிழையின்றி வேலை செய்வதில் கவனம் செலுத்தினால் சூப்பர் ஊழியராகி விடுவார்கள். அதற்கு அப்புறம் அவர்களை எல்லோரும் 'எக்ஸ்ப்ரஸ்' என்று கூட பேர் வைக்கக்கூடும்.

இந்த பாணியின் எதிர்மறை இரண்டாவது பெர்ஃபெக்டாக வேலை முடிப்பவர்கள் - எல்லா வற்றிலும் எல்லோரிடமும்பெர் ஃபெக்ஷன் எதிர் பார்ப்பார்கள்.இதனாலேயே சக ஊழியர்களுக்கு டென்ஷன். "வந்துட்டாங்கடா ஆடிட்டர்" என்ற காமண்ட் இவர்களைச் சுற்றி கேட்கும்.

இவர்களிடம் நல்லதரமான வேலையை எதிர் பார்க்கலாம். எதிலும் ஜாக்கிரதையாக பிழை யின்றி செயல்படுவார்கள். ஒருவேலையை தாமதமாக ஆரம்பித்து, மெள்ள சாவகாசமாக முடிப்பார்கள். பிழைகள் கண்டுபிடிப்பதில் இவர்களை யாரும் மிஞ்சமுடியாது. முக்கியமாக மனிதத் தன்மையை சில நேரங்களில் மறந்து விடுவார்கள்.

உங்களில் யாருக்காவது இந்த பர்ஃபெக்ட் எதிர்பார்ப்புள்ள பாஸ் (அ) கணவன் இருந்தால், வேலையின் தரம் உயரும், அதன் கூடவே உங்க இரத்த அழுத்தம் கூடலாம். ஏனெனில் இந்த ஸ்டைலில் குற்றங் குறைகளைக் கேட்டே டென்ஷன் ஏறும்.

இந்தப் பகுதியில்
நீங்களும் இடம்பெற
வேண்டுமென்றால்,
அலுவலகப்
பின்னணியில் வித்தியாசமான
சூழ்நிலைகளில் தங்களுடைய
சமீபத்திய
புகைப்படம் + பேட்டாவை
மொபைல் எண்ணுடன் சேர்த்து
mangayarmalar@kalkiweekly.com
இ மெயிலில் மட்டுமே
அனுப்பவும்.
கடைசித் தேதி: 25.06.2014

உங்களுக்கு இடையில், மிகவும் கடினமாக முயற்சி எடுத்தாலும், ஆர்வத்துடன் செயல் பட்டாலும், வேலையை சரிவர முடிக்க முடியாமல் இருக்கும் நபர்கள் இருப்பார்களே? இவர்கள் மூன்றாவது ஸ்டைல் 'கடினமாக முயற்சிசெய்யும்' நபர்கள்.

இவர்களுடைய ஸ்பெஷல் என்ன வென்றால் நிறைய விஷயங்களில் ஈடுபடுவார்கள், ஆரம்பிப்பார்கள் ஆனால் முடிப் பார்களா என்றால் சந்தேகம்தான். அடிக்கடி கவனம் சிதறிவிடும். ஒரு வேலையை ஆரம்பித்தால் அதை முடிப்பதற்குள் இவர்களுக்கு போரடித்து விடும். அதனால் மற்றவர்களுக்கு இடைஞ்சல் தான்.

இவர்களை ஆர்வத்துடன் இருக்க வைப்பது பாஸுக்கு சவால். ஏனெனில், ஒரு ப்ராஜெக்ட் ஆரம்பித்து முடிப்பதற்குள் இவர்கள் ப்ரேக் போட்டு விட்டால், அவ்வேலையை முடிப்பது பாதிக்கப்படும் இவர்களுக்கு ஊக்குவிப்பது முக்கியம். இதை புரிந்து அவர்களும் ஒத்துழைத்தால் சிறப்பாகச் செயல்படலாம்.

தன்னை 'வலிமைவாய்ந்தவர்கள்' என்று கருதும் நான்காவது வகையானவர்கள், வேலையிலே குறியாக தனியாகவே எல்லாவற்றையும் முடிக்க வேண்டும் என நினைப்பவர்கள். யாரிடமும் எந்த உதவியையும் எதிர்பார்க்க மாட்டார்கள். கொஞ்சம் சீரியஸான டைப். உணர்ச்சி வசப்படாமல் செயல்படுபவர்கள், மற்றவர்களுடைய உணர்ச்சிகளைக் கண்டு கொள்ளமாட்டார்கள்.

சில நேரங்களில் நட்புரிமை இல்லாமல் இருப்பது போலத் தோன்றும்.ஒரு குழுவில் செயல்பட்டாலும் எல்லாவற்றையும் தானாகவே செய்வது போல்நினைப்பார்கள்.எந்த சால்ஜாப்பும் இவர்களிடம் செல்லாது.ஆஃபிஸில் நகைச்சுவை உணர்வு குறையக் காரணமானவர்கள்.

இறுக்கமான சூழ்நிலைக்கு, அறியாமலே இவர்கள் காரணமாகி விடுவார்கள். யாரேனும் ஜோக் அடித்தால், ஓர் உறுத்த பார்வையால் தடுத்து நிறுத்தி விடுவார்கள். அவர்களுக்கு வேலையில் பிரச்னை வந்தால் தானே தேடிக்கொள்வார்கள். சில சமயம் ''மானேஜ் பண்ணலாம்'' என நினைத்து முடிக்க முடியாமல் போவதும் உண்டு. பிறரிடம் உதவி கேட்பதை தன்னுடை இமேஜுக்குக் குறைவு என நினைப்பார்கள்.

அதேசமயம், ஒரு பிக்னிக் போகிறோம் என்று எடுத்துக்கொள்வோம். எல்லோருடைய பொருள்களை இவர்கள் பார்த்துக்கொள்வார்கள், மற்றவர்கள் நிம்மதியாக ஜாலியாக விளையாடப் போகலாம். ஏனென்றால் இவர்களுக்கு உல்லாசமாக விளையாடத் தெரியாது இல்லையா?

இவர்களுக்கு எதிர்மறையானவர்கள் ஐந்தாவதான. எல்லோரையும் மகிழ்விக்கும் நபர்கள். சர்க்கரையாகப் பேசி எல்லோருடைய உணர்ச்சிகளையும் புரிந்துகொள்வார்கள். எல்லோரிடமும் இனிமையாகப் பேசி குழுவில் ஒற்றுமை ஏற்படக் காரணமாக இருப்பவர்கள்.



### ஆஃபிஸ் டேட்டா!

பெண் வீட்டிலும் அலுவலகத்திலும் நிறைய திறமைகளுடன் செயல்படுகிறாள். வேலைக்குச் செல்லும் பெண்கள் சில நேரங்களில் சில பிரச்னைகள் கூடுதலாக சந்திக்க வேண்டி உள்ளது.

அலுவலகத்தில் ஒரு பெண் எப்படி இருக்க வேண்டும் மற்றும் அவர்கள் எப்படிப்பட்ட உடையை அணிய வேண்டும் என்பதில் தெளிவுடன் இருக்க வேண்டும். உடை என்பது அவளின் தன்னம்பிக்கை, தூய்மை, மதிப்பு போன்றவற்றை உயர்த்திக் காட்டும்

விஜயலக்ஷ்மி, தனியார் நிறுவனம்.

மேலோட்டமாகப் பார்ப்பதற்கு இவர்கள் மகிழ்ச்சியாக இருப்பதுபோல் தெரிந்தாலும் அவர்களுடைய எண்ணங்களை வெளியே சொல்ல மாட்டார்கள். ''மாட்டேன், முடியாது, இல்லை'' என்று சொல்வது கடினம். ஆதலால் முடியாமல் இருந்தாலும் கழுதை சுமப்பது போல் அதிகமாக பொறுப்புகளை ஏற்றுக் கொண்டு திணருவார்கள்.

நீங்கள் எந்த ஸ்டைல் தெரிந்ததா? உங்களுடன் வேலை செய்யும் சகஊழியர்கள் எந்த ஸ்டைல் என புரிந்ததா? ஒருவருக்கே இரண்டு விதமாக வேலை செய்யும் ஸ்டைல் இருக்கலாம். ஒவ்வொரு வகைக்கும் ப்ளஸ் மைனஸ் இருப்பதால், யார் எந்த ஸ்டைலில் செயல்பட்டாலும் 'அது அவர்களுடைய ஸ்டைல். இதில் உள்ள நல்லதை எடுத்துக் கொள்வோம்' என்ற அணுகுமுறை நமக்கு டென்ஷன் ஏற்படுத்தாது.

ஆஃபிஸை சொர்க்கமாக்க இன்னமும் எந்த விதத்தில் டென்ஷன் குறைக்கலாம் என்பதை அடுத்த இதழில் பார்க்கலாமா? **(படி ஏறலாம்)**